வெலிமடை பிரதேசசபை
பதுளை மாவட்டம்

----------------------------

1. நிதிக்கூற்று

1.1 நிதிக்கூற்று சமர்ப்பித்தல்

2018 ஆம் வருடத்தின் நிதிக்கூற்று 2019 பெப்ரவரி 28 ஆம் திகதி கணக்காய்வுக்கென அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்று தொடர்பாக கணக்காய்வு அதிபதியின் அறிக்கை 2019 மே மாதம் 30 திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே மாதம் 31 ஆம் திகதி தவிசாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1.2 நிலைகள் தொடர்பில் கணக்கீடு செய்யப்பட்ட அபிப்ராயம்

இந்த அறிக்கையில் நிலையை விளக்கிய அபிப்ராயம் தொடர்பாக விபரத்தை தரும் பகுதியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலுள்ள விளைவுகள் தவிர்ந்த நிதிக்கூற்றுக்களில் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு வெலிமடை பிரதேசசபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்துடன் நிறைவடையும் ஆணிடிற்கான அதன் நிதி செயற்பாடு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் விதிகளுக்கமைவாகவும், உண்மையானதும் நியாயமானதுமான நிலையினை பிரதிபலித்து நிற்கின்றது என்பதே எனது அபிப்ராயமாகும்

1.3 நிலைப்படுத்தப்பட்ட அபிப்ராயத்திற்கான அடிப்படை

(அ) கணக்கீட்டு ரீதியிலான குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கு கொடுப்பு அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| (i) | மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்திற்கான நிலையான வட்டி ரூ.1,740,031 தொகை கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கிடப்பட வேண்டும். | வருங்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கையெடுப்பேன். |
| (ii) | மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்திற்கான கடன்கொடுத்தோருக்காக ரூ.620,270 தொகை ஒதுக்கப்படவில்லை. | சரியான பெறுமதி கணக்கிடப்பட வேண்டும | வருங்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கையெடுப்பேன<br><br>வருங்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கையெடுப்பேன |
| (iii) | மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் ரூ.13,873,443 தொகையாக இருப்பினும், நிதிக்கு4ற்றுக்களில் ரூ.13,884,432 தொகை குறிப்பிடப்பட்டுள்ளதால் ரூ.10,989 தொகையில் மாறுபாடு காணப்படுகின்றது. | சரியான பெறுமதி கணக்கிடப்பட வேண்டும | வருங்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கையெடுப்பேன |

| | | |
|---|---|---|
| (iv) | மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு பொது களஞ்சிய ரொக்கம் ரூ.97,564 தொகை கூடுதலாக காட்டப்பபடுள்ளது. | சரியான பெறுமதி கணக்கிடப்பட வேண்டும |

1.4 <u>ஏற்புடையதாக இருக்காமை</u>

சட்டத்திட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக காணப்படாமை

| சட்ட திட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு உட்பிரவேசிப்பு | ஏற்புடையதாக இருக்காமை | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| ------------------- | ------------------------------- | ---------------------------- | -------------------- |
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபை சட்டம் 159 (1) ஆ பிரிவு | மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் கடை வாடகை மற்றும் வாராந்த சந்தை கட்டணமாக அறவிடப்படவேண்டிய ரூ.1,052,119 தொகை நிலுவையாக உள்ளதுடன், அவற்றை அறவீடு செய்வதற்கு பொருத்தமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. | சட்டத்திலுள்ள பிரிவுகளுக்கமைய குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளது ஒழுங்குவிதிகளுக்கமைய செயலாற்ற வேண்டும். | சட்டத்திட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை பின்பற்றுவேன். |
| (ஆ)1988 பிரதேசசபைப (நிதிப்பிரமாணங்கள் 179 | வாடகைக்கு வழங்கப்பட்ட 14 கடையறைகள் தொடர்பாக கணக்கிடப்படவில்லை. | சட்டத்திட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய செயலாற்ற வேண்டும். | சட்டத்திட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை பின்பற்றுவேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ)உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு 1980/46 இலக்கமுடைய சுற்றுநிருபம் | 05 வருடங்களுக்கு ஒருமுறை ஆதன மற்றும் குத்தகை வாடகை என்பன மதிப்பிடப்பட வேண்டுமாயினும் 2010 வருடத்தின் பிறகு மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போதும், சபைக்குத்தான 35 கடையறைகள் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. | சுற்றுநிருபங்களுக்கமைய செயலாற்ற வேண்டும். | சட்டத்திட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை பின்பற்றுவேன். |
| (ஈ) 2016 டிசம்பர் 29 திகதியுடைய 30/2016 இலக்கமுடைய அரச நிர்வாக சுற்றறிக்கை | பிரதேசசபைக்கு சொந்தமான 09 வாகனங்களில் எரிபொருள் பரிசோதனை நடைபெறவில்லை. | உரிய காலப்பகுதியில் எரிபொருள் பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும். | சட்டத்திட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை பின்பற்றி ஆவணங்களை பேணுவேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி பெறுபேறு

சமர்ப்பிக்கப்படும் நிதிக்கூற்றுக்களுக்கமைய மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய ரூபா வருமானம் 24,772,946 ஆவதுடன், அதற்கிசைவான கடந்த வருடத்தின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூ.35,483,499 தொகையாக காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடு செய்யப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், திரட்டிய வருவாய் மற்றும் நிலுவை வருவாய்

மீளாய்வு செய்யப்பட்ட வருடம் மற்றும் நிறைவடைந்த வருடத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு வருமானம் பட்டியலிடப்பட்ட வருமானம் திட்டிய வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருவாய் மூலம் . | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியிலிடப்பட்ட வருமானம் | திரட்டிய வருமானம் | டிசம்பர் 31 திகதிக்கு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியிலிடப்பட்ட வருமானம் | திரட்டிய வருமானம் | டிசம்பர் 31 திகதிக்கு மொத்த நிலுவை |
| | --------- | ------------- | ------------- | ------------- | ---------------- | ----------------- | --------------- | --------------- | ---------------- |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i | சோலைவரி மற்றும் வரி | 5,270,774 | 5,330,777 | 4,179,411 | 5,098,622 | 5,268,770 | 5,386,379 | 4,107,924 | 5,273,711 |
| ii | வாடகை | 3,282,865 | 3,282,865 | 3,479,898 | 3,588,386 | 3,282,865 | 2,866,027 | 2,282,566 | 3,266,613 |
| iii | அனுமதிபத்திர | 12,827,890 | 12,492,061 | 11,986,012 | 12,232,014 | 7,047,100 | 7,159,939 | 6,925,273 | 7,197,733 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| iv | கட்டணம் பிற வருமானம் | - | 34,412,765 | - | - | - | - | - | 44,379,003 |
| | மொத்தம் | 21,381,529 | 55,518,468 | 19,645,321 | 20,919,022 | 15,598,735 | 15,412,345 | 13,315,763 | 60,117,060 |

2.2.2 வருமானம் திரட்டும் செயலாக்கம்

2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் பட்டியலிடப்பட்ட ரூ.55,518,468 தொகை மொத்த வருமானத்தில் வருடம் நிறைவடையும் போது ரூ.20,919,022 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லையென்பதுடன், அது பட்டியலிடப்பட்ட வருமானத்தின் நூற்றுக்கு 38 ஆகும். | நிலுவை வருமானம் அறவிடப்பட் வேண்டும். | வருங்காலத்தில் நிலுவை வருமானம் அறவிட நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | ஓராண்டுக்கு அதிகமாக நிலுவையிலிருந்து வரும் சோலைவரி மற்றும் நிலுவையாகவுள்ள பிற வருலுமான மொத்தங்களின் எண்ணிக்கை ரூ.43,263,658 மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்திலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருங்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுப்பேன். |

(அ) நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரது கருத்துரைப்பு |
|---|---|---|
| (அ) நீதிமன்ற தண்டப்பணம்<br><br>மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிட வேண்டியுள்ள நிலுவை நீதிமன்ற தண்டப்பணமான ரூ.21,310,525 ஆகும். | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். | வருங்காலத்தில் நிலுவை வருமானம் அறவிட நடவடிக்கை எடுப்பேன். |

(ஆ) முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரது கருத்துரைப்பு |
|---|---|---|

| ---------------------------------------------- | --------------------- | |
|---|---|---|
| மீளாய்வுசெய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டியுள்ள நிலுவை முத்திரைக்கட்டணம் ரூ.5,571,595 இருந்தது. | நிலுவை முத்திரைக்கட்டணம் அறவிடப்பட வேண்டும். | வருங்காலத்தில் நிலுவை வருமானம் அறவிட நடவடிக்கை எடுப்பேன். |

3. <u>செயற்பாட்டு மீளாய்வு</u>

3.1 <u>செயலாக்கம்</u>

பிரதேசசபை சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம் பொதுபயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப்பாதைகள் தொடர்பான விடயங்களை முறைமையாக்கல் மற்றும் பரிபாலனம் செய்தல் மக்களது வசதியான பயன்பாடு வசதி மற்றும் நலன்புரி சேவை ஆகியன சபையினால் நிறைவேற்றப்படுவது தொடர்பாக தெரியவந்த விடயங்கள் கீழ்க்காட்டப்பட்டுள்ளது.

(அ) <u>செயல் திட்டமிடல்</u>

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கு கொடுக்கும் அலுவரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| ------------------------------ | ----------------------- | ---------------------------------------- |
| மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்திற்காக செயல்திட்டமிடல் வரைபு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் திட்டமிடல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். | விடய பொறுப்பு அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. . |

(ஆ) <u>நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்</u>

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| --------------------------------------------- | --------------------- | --------------------- |
| சபையானது ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவினை பெற்றதுடன், நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கை அளவிடுவதற்காக குறிக்காட்டிகள் இனங்காணப்படவில்லை | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்கள் தொடர்பான அளவீட்டை செய்வதற்கான குறிக்காட்டிகளை இனங்கண்டு அதற்கிணங்க ஆண்டுரீதியான இலக்குகளை அடையும் விருத்தி விகிதத்தை அளவிட வேண்டும். | வருங்காலத்தில் நிலைபேறான அபிவிருத்தி நோக்க்ங்கள் மற்றும் இலக்குகளுக்கிணங்க செயலாற்ற எதிர்ப்பார்க்கின்றேன். |

3.2 <u>முகாமைத்துவத்தின் விணைத்திறன் அற்ற தன்மை</u>

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| | --------------------------------------------- | ---------------------------------- | ---------------------- |
| (அ) | வெலிமடை பிரதேசசபைக்கு சொந்தமான வெலிமடை நகரில் அமைந்துள்ள கட்டிடமொன்றை அரச வங்கி கிளையொன்றை நடாத்திச்செல்வதற்காக மாதத்துக்கு ரூ.150,000 வாடகைக்கு கொடுப்பதற்கு அவ்வங்கியுடன் 05 வருடத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது. மதிப்பீட்டு திணைக்களம் மாதாந்த வாடகையை மதிப்பீடு செய்திருப்பது 03 வருட காலத்திற்காதலால் எஞ்சிய 02 வருடத்திற்காக வாடகை திருத்தம் மேற்கொள்ள இருந்த சந்தர்ப்பம் நழுவியது. | சபைக்கு நன்மையேற்படும் விதத்தில் வெளியாருடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும். | ஒப்பந்தத்தை திருத்தம் செய்ய அறிவுறுத்தி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | ஓராண்டுக்கதிகமாக நிலுவையிலிருந்து வரும் செலுத்த வேண்டிய செலவு கடன்கொடுத்தோர் பணம் ரூ.33,177,204 தொகை மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிலும் சரிசெய்யப்படவில்லை. | செலுத்த வேண்டிய தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடப்பாண்டில் செலுத்த வேண்டிய மிகுதிகளை செலுத்த நடவடிக்கை எடுப்பேன். |

3.3 திண்மக்கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| -------------------------------------------- | ------------------------ | ------------------------------ |
| 1988 ஆண்டு 56 மற்றும் 2000 ஆண்டு 53 இலக்கம் கொண்ட சட்டங்களிலிருந்து திருத்தப்பட்ட 1980 ஆண்டு 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 11 பகுதியின் 1 (1) (அ) (உ) அமைய சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்கும் பொருட்கள் மற்றும் திண்மக்கழிவு போதுமான கட்டுப்பாடுடன் அகற்றப்பட வேண்டியிருப்பினும் பிரிக்கப்பட்டு பெறப்படாத கழிவுகளை முறையற்ற விதத்தில் வெளியேற்றல் மேற்கொள்ளப்படுகின்றது. | கழிவகற்றலானது முறைப்படி செய்யப்பட வேண்டும். | சுற்றாடல் சட்டத்திற்கமைய திண்மக்கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகள் மற்றும் கழிவகற்றல் வேலைகள் என்பவற்றுக்கான தற்போது வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

3.4 கொள்வனவு .

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| ------------------------------------- | ----------------------- | ----------------------------- |
| மீளாய்வுசெய்த ஆண்டிற்காக கொள்வனவு திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | கொள்வனவு திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2019 வருடத்திற்காக கொள்வனவு திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. . |

3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| --------------------------- | ------------------------ | ------------------------------------ |
| சபையிலிருந்து இடமாற்றம் பெற்றுச்சென்ற மற்றும் சேவையை விட்டு விலகிய உத்தியோகத்தர்கள் 13 பேரிடம் மீளாய்வு செய்த ஆண்டில் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய ரூ.233,886 நிலுவை கடன் அறவிடப்படவில்லை. | நிலுவை கடன் மிகுதிக்குரித்தான நபர்களிடமிருந்து தொகை அறவிடப்பட வேண்டும். | சட்ட ஒழுங்குவிதிகளை பின்பற்றி பதிவேடுகளை பேணுவேன். |

4. கணக்கீட்டு செயன்முறை மற்றும் நல்லாட்சி

4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| ------------------------------------- | ----------------- | --------------------------- |
| மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்திற்காக உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை. | உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | வருங்காலத்தில் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |

4.2 <u>கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டிகள்</u>

| கணக்காய்வு அவதானிப்புக்கள | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கை இல.டி.எம்.ஏ 2009 (01) கொண்ட 2009 ஜூன் 09 கொண்ட சுற்றறிக்கைக்கு அமைய காலாண்டுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி கூட்டத்தை நடாத்த வேண்டுமெனினும் மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்திற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி 02 மாத்திரம் நடாத்தப்பட்டுள்ளது. | .சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி நடாத்தப்பட வேண்டும் | ஒன்றிணைத்து நடாத்தப்பட்ட கமிட்டிகளில் பங்குபற்றப்பட்டுள்ளது. |